# ஆலய வழிபாட்டில் துளைக்கருவிகளின் பங்களிப்பும் நவீன உலகில் அவற்றின் நிலைப்பாடும்

சுஜாதா நிரஞ்சன்[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*இறைவனிடத்தில் அன்பு செலுத்திக் கடவுளை உணர முயலும் வழிமுறையே பக்தி மார்க்கமாகும். சைவ வைணவ சமயங்களுக்குரிய பல்வேறு பக்தி மார்க்கங்களில் இறைவன் புகழை இசையுடன் பாடுதலும் ஒன்றாக விளங்குகின்றது. இந்த இசையானது குரலிசையாகவும், விரலிசையாகவும் (இசைக்கருவிகள்) இசைக்கப்படுகின்றது. ஆதிகாலத்தில் கோயில்கள் கலை வளர்க்கும் நிலையங்களாக விளங்கின. அரசர்களும், ஜமீன்தார்களும், ஊர்ப்பெரியவர்களும் கலையைப் போஷித்துக், கலைஞர்களுக்கு மரியாதை செய்து அவர்களுடைய வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்தார்கள். கலைஞர்களும் பொது மக்களுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்களாக இருந்தார்கள். அண்மைக்காலத்தில் பல்வேறு காரணங்களால் கோவில் வருமானம் குறைவடைந்தமையால் கலைஞர்களைக் கோவில்கள் ஆதரிக்க முடியாமல் போய்விட்டது. ஆகவே பல நூற்றாண்டுகளாகக் கோவில்களில் வளர்ந்து வந்த கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் மங்கு நிலை ஏற்பட்டது. எந்தக் கோயிலில் எந்த இசைக்கருவி இருந்தது என்று தெரியாதநிலை ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் ஆலயங்களில் பூஜை மற்றும் கிரியை வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற துளைக்கருவிகளைத் தெரியப்படுத்தவும், மறைந்து சென்ற இசைக்கருவிகளின் பெயர்கள், அவற்றின் வரலாறு, சிறப்புக்கள், கிரியைகளில் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் என்பவற்றை எல்லோரும் அறியச்செய்து மறைந்த இசைக்கருவிகளை மீள்பயன்பாட்டிற்குக் கொண்டு வருதலுமே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். இந்த ஆய்வு வரலாற்று ரீதியிலும், களரீதியான முறையிலும் செய்யப்படுகின்றது. மேலும் இந்த ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் நூல்கள், இணையத்தளங்கள், நேர்காணல் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆலய வழிபாடுகளில் நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சற்கருவி, தோற்கருவிகள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் ஏனைய கருவிகளைவிடத் துளைக்கருவிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் சிறப்பாகக் காணப்படுகின்றது. இவற்றில் துளைக்கருவிகளான நாதஸ்வரம், குழல், சங்கு, முகவீணை போன்றவையும் கொம்பு, திருச்சின்னம், எக்காளம், தாரை, பூரி, வாங்கா, கௌரிகாளம் ஆகிய ஊதுகருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தற்போது சங்கு, நாதஸ்வரம் ஆகியவை மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சங்கு என்ற கருவியும் முன்னர் திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலையில் மக்களைத் துயில் எழுப்புவதற்காகப் பஜனை பாடிச் செல்பவர்களால் இசைக்கப்பட்டு வந்தது. தற்போது சங்கும் ஒலிக்கப்படுவது குறைவாகவே உள்ளது. இவ்வாறே நாதஸ்வரம் வாசிக்கும்போது சுருதிப்பெட்டிக்காக ஒத்து என்ற துளைக்கருவியும் பயன்பாட்டில் இருந்தது. தற்போது மின்சாரத்தில் இயங்கும் சுருதிப்பெட்டியின் வருகையால் ஒத்து என்ற கருவி இல்லாமலே மறைந்துவிட்டது. ஆகவே மறைந்த இசைக்கருவிகளை மீளுருவாக்கம் செய்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டியது அவசியமானதொன்றாகும்.*


**திறவுச்சொற்கள்:** ஆலயங்கள், இசைக்கருவிகள், இசை, துளைக்கருவி, இசைக்கலைஞர்கள்

[1]*இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
sujathaviolin@gmail.com

## ஆய்வின் அறிமுகம்

இசையென்பது ஆன்மாவை இறைவனோடு இசைய வைக்கும் ஒரு சாதனமாகும். இறைவனே இசைவடிவினனாகக் காணப்படுகின்றான். சரஸ்வதி கையில் வீணையும், சிவன் கையில் டமருகமும், கண்ணன் கையில் புல்லாங்குழலும் இருப்பதிலிருந்து இது புலனாகிறது. தமிழிசையானது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பழந்தமிழ் மக்களால் உருவாக்கப்பட்ட இசையாக விளங்குகிறது. இந்தத் தமிழிசையானது முற்காலத்தில் பண்ணிசையென அழைக்கப்பட்டு வந்தது. பண்ணிசையாகிய தமிழிசையைத் தேவாரமுதலிகள், காரைக்காலம்மையார் போன்றோர் கோயில்கள் தோறும் சென்று பண்ணோடு பாடித் தமிழிசையை வளா்த்தனா். பழங்காலத்தில் இசைநிகழ்ச்சிகள் எல்லாம் திருக்கோயிலின் ஒரு பொதுவான இடத்திலோ அல்லது இறைவனின் முன்பாகவோ வைத்து நடத்தப்பெற்றன. பின்னா் திருவிழாக்களும் வழிபாடுகளும் நிகழ்த்துவதற்கென்று நூற்றுக்கால் மண்டபங்களும் ஆயிரங்கால் மண்டபங்களும் அமைக்கப்பெற்று அதில் இசைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றன. பின்பு, இதற்கென்று தனியாகச் சங்கீதமண்டபங்களும் நா்த்தன மண்டபங்களும் அமைக்கப்பெற்றன. இந்தவகையில் தமிழிசையானது குரலிசையாகவும் வாத்திய இசையாகவும் வளா்க்கப்பட்டு வந்துள்ளது. இசை ஒன்றே, என்றாலும் இசைக்கருவிகள் பற்பல. இறைவன் ஒருவனே. அவனை அடைவதற்கான மாா்க்கங்கள் பல. இவ்விசைக்கருவிகள் நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சற்கருவி, தோற்கருவியென நான்கு வகைப்படுத்தப்படுகிறது. இவற்றில் துளைக்கருவிகள் ஆலயவழிபாட்டில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாதஸ்வரம், குழல், சங்கு, முகவீணை போன்ற துளைக்கருவிகளும், கொம்பு, திருச்சின்னம், எக்காளம், தாரை, பூரி, வாங்கா, கௌரிகாளம் ஆகிய ஊதுகருவிகளும் ஆலயவழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஆய்வின் நோக்கம்

ஆலயங்களில் பூஜை மற்றும் கிரியை வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற துளைக்கருவிகளைத் தெரியப்படுத்தவும், மறைந்து சென்ற இசைக்கருவிகளின் பெயா்கள், அவற்றின் வரலாறு, சிறப்புகள், கிரியைகளில் பயன்படுத்தப்பட்ட சந்தா்ப்பங்கள், தற்காலத்தில் அவற்றின் நிலைப்பாடு என்பவற்றை எல்லோரும் அறியச்செய்து மறைந்த இசைக்கருவிகளை மீள்பயன்பாட்டிற்குக் கொண்டு வருதலுமே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

## இலக்கிய மீளாய்வு

இவ்வாய்விற்குத் தேவையான தகவல்களை ராமகௌசல்யா என்பவரால் எழுதப்பட்ட ஆலயவழிபாட்டில் இசைக்கருவிகள், முனைவா் அங்கயற்கண்ணி மற்றும் முனைவா் மாதவி என்பவா்களால் வெளியிடப்பட்ட தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி 1, தமிழிசை

தொன்மையும் பெருமையும் தொகுதி 2, பேராசிரியர் ஞானா குலேந்திரன் என்பவரால் எழுதப்பட்ட தெய்வத்தமிழிசை, பக்கிரிசாமிபாரதி என்பரால் எழுதப்பட்ட திருக்கோயில் நுண்கலைகள், அ.நா.சோமாஸ்கந்தசர்மா என்பவரால் எழுதப்பட்ட மிருதங்க சங்கீதசாஸ்திரம் போன்ற பல நூல்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. முனைவர் ராம. கௌசல்யா என்பவரால் எழுதப்பட்ட இந்நூலில் ஆலயவழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட நான்குவகை இசைக்கருவிகள், அவற்றின் வரலாறு, வாத்தியக்கருவிகளின் படங்கள், கிரியை நேரங்களில் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள், வாசிக்கப்பட வேண்டிய ராகங்கள், பண்கள், உருப்படி வகைகள், ஒவ்வொரு கோயில்களிலும் பயன்படுத்தப்பட்ட வாத்தியக்கருவிகள், தற்போது வழக்கத்தில் உள்ளவை, வழக்கொழிந்து சென்றவை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி 1 என்ற நூலில் கல்பனாதேவி அதியமான் என்பவரால் எழுதப்பட்ட "இசைக்கருவியாகச் சங்கு" என்ற ஆய்வுக்கட்டுரையில் சங்கின் அமைப்பு, வாசிக்கும்முறை, ஒலி உருவாகும் விதம், இசைக்கருவியாகச் சங்கு பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள், இது முற்காலத்தில் இருந்தமைக்கான இலக்கியக்குறிப்புகள், கோயில் வழிபாடுகளில் சங்கு இசைக்கப்பட்ட செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி 2 என்ற நூலில் ரெ.பாலு என்பவரால் எழுதப்பட்ட "புல்லாங்குழல்" என்ற கட்டுரையில் குழலின் தோற்றம், முருகவழிபாட்டில் சங்கு பயன்படுத்தப்பட்டமை, யசுர்வேதம், சாமவேதம் ஓதும் போது சங்கு, குழல் இசைக்கப்பட்ட செய்தியும், சாமவேதம் இசைக்கப்பட்ட போது மூங்கிலால் செய்யப்பட்ட முரளி என்னும் குழலும், மரத்தில் செய்யப்பட்ட "துவனா" என்ற குழலும், நாணல் தட்டையால் செய்யப்பட்ட "நாதி" எனும் குழல், மற்றும் "பாக்குரா" என்ற குழல் இசைக்கப்பட்ட செய்திகள், கோயில்களில் குழலை இசைக்கும் கலைஞனின் சிற்பங்கள் காணப்படும் செய்திகள், முருக வழிபாட்டில் குழல் இசைத்த செய்திகள் எடுத்துக் கூறியுள்ளார். அ.நா.சோமாஸ்கந்தசர்மா என்பவரால் எழுதப்பட்ட மிருதங்க சங்கீதசாஸ்திரம் எனும் நூலில் நாட்டுப்பாடல்களில் வாசிக்கப்படும் கருவிகள் என்ற கட்டுரையில் கோயில் வாத்தியங்கள் என்ற தலைப்பில் "அஷ்டதஸவாத்தியங்கள்" என்ற தலைப்பில் (18 வகை இசைக்கருவிகள்) கோயில்கிரியைகளில் இடம்பெறும் செய்தி, நாதஸ்வரம், முகவீணை, ஒத்து, புல்லாங்குழல் பற்றிய செய்திகள் மங்களவாத்தியம் என்ற தலைப்பின் கீழ் கோயில் வழிபாட்டில் நாதஸ்வரம் வாசிக்கும் முறை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கே.ஏ.பக்கிரிசாமிபாரதி என்பவரால் எழுதப்பட்ட திருக்கோயில் நுண்கலைகள் என்ற புத்தகத்தில் திருக்கோயிலில் நாதஸ்வரம் வாசிக்கும் முறை, திருவீதி உலாவில் நாதஸ்வரம் வாசிக்கும் முறை, திருக்கோவிலில் வாசிக்கப் பெறும் இசைக்கருவிகளின் பங்கு, அஷ்டாதச வாத்தியங்கள், மரபிலிருந்து நீங்கும் மங்கல இசைக்குழு, சர்வவாத்திய வழிபாடு, மறைந்த கொண்டிருக்கும் இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இந்த ஆய்வில் ஆலயவழிபாட்டில் முன்னைய காலத்தில் இடம்பெற்ற துளைக்கருவிகள், தற்போது மறைந்து கொண்டிருக்கும் துளைக்கருவிகள், கோயிற்கிரியை களில் அவைபெறும் முக்கியத்துவம், தற்போது புதிதாக இடம்பெறும் துளைக்கருவிகள், அவற்றைத் திரும்பவும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு வரலாற்று ரீதியிலும், களரீதியான முறையிலும் ஆய்வு செய்யப்படுகின்றது.

**ஆய்வு மூலங்கள்**

முதல்நிலைத் தரவுகளாக வரலாற்று நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்து பெற்ற தகவல்களையும், இரண்டாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், ஆலயங்களுக்கு சென்று நேரடியான அவதானிப்பு மற்றும் இணையத்தளங்களிலிருந்து பெற்ற தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு நியாயப்பாடு**

ஆலயவழிபாடுகளில் இசையும், இசைக்கருவிகளும் இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. இங்கு பல வகை இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் துளைக்கருவிகளும், ஊது கருவிகளும் பூஜை மற்றும் கிரியை வழிபாடுகளிலும் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன. ஆனால் இன்று பல வகைக்கருவிகள் வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. இவ்வாத்தியங்களைக் கோயில் வழிபாடுகளில் திரும்பவும் கொண்டு வருவதற்கு ஆலயங்கள், அரசாங்கம், வசதி படைத்த தனியார் முன்வரவேண்டியது கடமையாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

ஆலயவழிபாட்டில் நடைபெறும் நித்திய, நைமித்தியப் பூஜைகளிலும், கிரியைகளிலும் ஏனைய கருவிகளைவிடத் துளைக்கருவிகளின் பங்கு இன்றியமையாத தொன்றாகக் காணப்படுகின்றது.

**ஆய்வின் எல்லை**

ஆலயங்களில் இடம்பெறும் கிரியை வழிபாடுகளில் நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சறக்கருவி, தோற்கருவி போன்ற பல வகைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் துளைக்கருவிகளின் பங்கு பற்றியே ஆராயப்படவுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

முன்னைய காலங்களில் நாதஸ்வரம், குழல், சங்கு, முகவீணை போன்ற துளைக்கருவிகளும், கொம்பு, திருச்சின்னம், எக்காளம், தாரை, பூரி, வாங்கா, கௌரிகாளம் ஆகிய ஊதுகருவிகளும் வழக்கத்தில் இருந்துள்ளது. ஆனால் தற்போது நாதஸ்வரமும் சங்கும் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஏனையவை வழக்கொழிந்து செல்லும் நிலையில் உள்ளன. இத்துடன் போதிய வருமானமின்மையால் நாதஸ்வரத்தை இசைக்கும் கலைஞர்களும் சமூகத்தில் குறைவடைந்து செல்கின்றமையும் ஆய்வுப்பிரச்சினையாகும்.

**ஆய்வுப் பயன்**

இவ்வாய்வானது இசை சம்பந்தமான பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும், தற்போது ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற மற்றும் இனி ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கும் இசை ஆசிரியர்களுக்கும், இசை ஆர்வலர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

**நாதஸ்வரம்**

தென்னிந்தியாவில் மங்களகரமான நிகழ்வுகள் நாதஸ்வர இசையுடன் நடைபெறுவது மரபு. திருமணம், பொது நிகழ்ச்சிகள், கோயில் வழிபாடு, நாட்டுப்புறக்கலைகள் என்று பல்வேறு இடங்களில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. “பழங்காலத்தில் எல்லாத் திருக்கோயில்களிலுமே இசைக்கருவிகள் வாசிப்போர், மேளக்காரர், ஆடல் கணிகையர், நட்டுவாங்கம்செய்பவர், பாடுபவர், திருப்பதிகம் விண்ணப்பம் செய்பவர் (தேவார ஓதுவார் மூர்த்தி) என்று பலர் நிரந்தரமாகப் பணியாற்றி வந்துள்ளனர். இவர்களுக்காக வீடும், நிலமும் மானியமாக அளிக்கப்பட்டிருந்தது. இதில் மேளக்காரர் என்பவர் “தஞ்சாவூர் மேளம்” என்றும், “பெரியமேளம்” என்றும் அழைக்கப்பட்டனர். இந்த இசைக்குழுவில் நாகசுரம் வாசிப்பவர், ஒத்து எனப்படும் “ஒத்து நாகசுரம்” ஊதுபவர், தவில் அடிப்பவர், தாளம் போடுபவர் என்று நான்கு கலைஞர்கள் இடம்பெறுவர். (2 நாகசுரம், 2 தவில் என்று வாசிக்கும் முறை சுமார் 60 ஆண்டுகளாகத் தான் நடைமுறைக்கு வந்துள்ளது. மேலும் ஓம்கார நாதத்தை எழுப்பும் ஒத்து நாகசுரம் என்ற இசைக்கருவி மறைந்ததால் சுமார் 35 வருடங்களாகத் தான் சுருதிப்பெட்டியை இசைக்கும் முறை நடைமுறைக்கு வந்துள்ளது. “திருப்பதிகம் விண்ணப்பிக்கும் இசைக்குழுவில் தேவார ஓதுவார் மூர்த்தி (பாடுபவர்), புல்லாங்குழல் இசைப்பவர், வீணை வாசிப்பவர், மத்தளம் முழங்குபவர் என்று நான்கு பேர் இடம்பெறுவர். சில திருக்கோயில்களின் பூஜாகாலங்களில் பல்வகையான இசைக்கருவிகளை முழக்குபவரும் பணியாற்றுவதுண்டு. இவர்கள் எல்லாம் முழுநேரப் பணியாளர்களாக ஆலயங்களில் பணியாற்றி வந்துள்ளனர்.” (பக்கிரிசாமிபாரதி,

கே.ஏ., 2004:31). “நாதஸ்வரத்துக்கென்று தனிப்பட்ட மரபுகள் உண்டு. 1959ஆம் ஆண்டு சுவாமிமலையில் தமிழகத்திலுள்ள அனைத்துத் திருக்கோயில்களிலிருந்தும் நாதஸ்வரக் கலைஞர்களை அழைத்துத், தமிழகத்துத் திருக்கோயில் நாதஸ்வரக் கலைஞர்களுக்குப் “பூஜாகாலங்களில் நாதஸ்வரம் வாசிக்கும் முறைகள்” பற்றிய பயிற்சி வகுப்பு நடாத்தப்பெற்றது. இதற்குத் திருப்பாம்புரம் திரு.சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றினார்கள். இதில் கலந்து கொண்டவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன” (கௌசல்யா, ராம., 2004:31).

“கி.பி 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இராமசாமி தீட்ஷிதர் (1735-1817) என்ற இசைக்கலைஞர் ஆகமசாஸ்திரத்திலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவரது கனவில் தோன்றிய திருவாரூர் ஸ்ரீ வீதிவிடங்க தியாகராஜ சுவாமிகள் தம் பூஜாகாலங்களில் நாகசுரக்கலைஞர்கள் எந்தெந்த நேரத்தில் என்னென்ன இராகங்களை வாசிக்க வேண்டும் எனக்கட்டளையிட்டு, அதனை ஆகமமாக வழங்குமாறு கூறி மறைந்தருளினார். இதனடிப்படையில் இராமசாமி தீட்ஷிதர் திருவாரூர்க் கோயிலில் நாதசுரக்கலைஞர்கள் வாசிக்க வேண்டிய நியமன முறைகளையும், இறைவனின் திருவீதியுலாவின் பொழுது எந்தெந்த இடங்களில் என்னென்ன இராகங்களை வாசிக்க வேண்டும் என்ற நியதிகளையும், ஆகமமாக வடித்துள்ளார். இம்முறையினைப் பின்பற்றியே இன்றும் இத்திருக்கோயிலில் நாகசுரக் கலைஞர்கள் பரம்பரை பரம்பரையாக வாசித்து, மரபுநிலையைக் காத்து வருகின்றனர்” (பக்கிரிசாமிபாரதி, கே.ஏ., 2004:32).

“காலசந்தி, உச்சிக்காலம் முதலிய பூஜாகாலங்கள் நடக்கும் போது அந்தக்காலங்கள் நடக்கும் நேரத்தை (மணியை) அனுசரித்துக் கீழே குறிப்பிட்டிருக்கும் இராகங்களையும், அந்தந்த இராகங்களில் அமைந்த கீதம், வர்ணம், கீர்த்தனை முதலிய உருப்படிகளையும், கால பூஜை முடிவில் கற்பூரஹாரத்தியின் போது தேவாரம், திருப்புகழ் முதலியவைகளையும் வாசிக்க வேண்டும். இரவு அர்த்தஜாமப்பூஜையில் சுவாமி பள்ளியறைக்கு எழுந்தருளும் போது ஆனந்தபைரவி, நீலாம்பரி, கேதாரகௌளை, புன்னகவராளி ராகங்கள் வாசிக்க வேண்டும்.” (கௌசல்யா, ராம., 2004:32)

**ஆலயங்களில் பூஜாகாலங்களில் வாசிக்கவேண்டிய இராகங்கள்**

காலை 4 – 6 மணி – பூபாளம், பௌளி, மலையமாருதம், வலசி, நாதநாமக்கிரியை, மாயாமாளவகௌளை

காலை 6 – 8 மணி - பிலஹரி, கேதாரம், கௌரிபந்து, ஜகன்மோஹினி, சுத்ததன்யாசி

காலை 8 – 10 – தன்யாசி, அஸாவேரி, சாவேரி, ஆரபி, தேவகாந்தாரி, தேவமனோகரி

காலை 10 – 12 – சுருட்டி, ஸ்ரீராகம், மத்யமாவதி, மணிரங்கு, பிருந்தாவனசாரங்கா, தா்பாா்

பகல் 12 – 2 – சுத்தபங்காளா, பூா்ணசந்திரிகா, கோகிலத்வனி, முகாரி, கௌடமல்லா

பகல் 2 – 4 – நாட்டைக்குறிஞ்சி, உசேனி, ரவிச்சந்திரிகா. வா்த்தனி. ஹம்சானந்தி, மந்தாரி

மாலை 4 - 6 – பூா்விகல்யாணி, பந்துவராளி, வசந்தா, லலிதா, சரஸ்வதி, சீலாங்கி, கல்யாணி

மாலை 6 – 8 – சங்கராபரணம், பைரவி, கரகரப்பிரியா, பைரவம், நாராயணி, ஹம்சத்வனி, கௌளை

இரவு 8 – 10 – காம்போதி, ஷண்முகப்பிரியா, தோடி, நடைபைரவி, ஹரிகாம்போஜி, கமாஸ், ரஞ்சனி

இரவு 10 – 12 – சிம்மேந்திரமத்திமம், சாருகேஸி, கீரவாணி, ரீதிகௌளை, ஆனந்தபைரவி, நீலாம்பரி, யதுகுலகாம்போஜி

இரவு 12 – 2 – அடானா, கேதாரகேளளை, பியாகட, சாமா, வராளி, தா்மவதி

இரவு 2 – 4 - ஹேமவதி, ஹிந்தோளம், கா்நாடகதேவகாந்தாரி, ரஸாவளி, பாகேஸ்வரி, மோகனம்

**உற்சவகாலங்களில் வாசிக்க வேண்டிய முறைகள்**

மண்டகப்படி தீபாராதனை – தளிகை நைவேத்யம் எடுத்துவர மிஸ்ரமல்லாரிராகம்

தீபாராதனை சமயம் - தேவாரம், திருப்புகழ்

புறப்பாட்டுக்கு முன் - நாட்டைராகம்

புறப்பாடு ஆனதும் யாகசாலை வரை – த்ருபுடைதாள மன்னியில் மற்ற தாளங்களில் மல்லாரி

யாகசாலை தீபாராதனை சமயம் - ஒத்து, நாதஸ்வரம், மிருதங்கம் மாத்திரம்

யாகசாலை முதல் கோபுரவாசல் வரை – த்ருபுடைதாள மல்லாரி

கோபுரவாசல் முதல் தேரடி வரை - இதர மல்லாரிகளும் வா்ணமும்

தேரடியிலிருந்து தெற்கு ரத பாதி வரை – ராகம்

தெற்கு ரத வீதி பாதிமுதல் மேலரத பாதி வரை – ராகம், பல்லவி

மேலரத வீதி பாதி முதல் ஈசான்ய மூலை முதல் தேரடி வரை – கீா்த்தனைகள்

ஈசான்ய மூலை முதல் தேரடி வரை - தேவாரம், திருப்புகழ்

தேரடி முதல் கோயில் பிரகாரம் வரை – நட்டு முட்டு சின்னமேளம் (அல்லது) முகவீணை

கோயிலுக்குள் - துரிதகால திரிபுடைதாள மல்லாரி

தட்டு சுற்றும் சமயம் - தேவாரம், திருப்புகழ்

யதாஸ்தானத்திற்கு – எழுந்தருளும் போது – எச்சரிக்கை (கௌசல்யா, ராம., 2004:34)

இறைவனுக்கு நீராட்டம் செய்வதற்குத் திருமஞ்சனநீா் எடுத்து வரும் போது – தீா்த்தமல்லாரி

மடப்பள்ளியிலிருந்து நைவேத்தியம் எடுத்து வரும்போது – தளிகை மல்லாரி

மல்லாரி, எச்சரிக்கை, ரத்தி, ஒடகூறு (உடற்கூறு) போன்ற இசைவகைகள் நாதசுரக் கலைஞர்களால் மட்டுமே இன்று வாசிக்கப்படுகின்றன என்பதும் அரிய தகவலாகும்.

"கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலில் "கல் நாதஸ்வரம்" ஒன்று உள்ளது. மேலும் ஆழ்வார் திருநகரியில் உள்ள ஆழ்வார் கோயிலில் மாவுக்கல்லினால் செய்யப்பட்ட கல் நாதஸ்வரம் ஒன்று உள்ளது. முகவீணை போன்ற சிறிய அமைப்பிலுள்ள இந்த நாதஸ்வரத்தை வழிபாடுகளின் போதும், விழாக்களிலும் இசைக்கின்றனர். இதன் நாதம் அழுத்தமாகவும், மிகவும் இனிமையாகவும் உள்ளது. மேலும் இங்கு ஒரு பெரிய தூணில் கல்லில் சிறிய குழாய் போன்று கடைந்து செய்யப்பட்டுள்ளது. இவற்றின் ஒரு முனையில் வாய் வைத்து ஊதினால் "எக்காளத்தின்" நாதமும், மற்றொரு முனையில் ஊதினால் "சங்கின்" நாதமும் கேட்கின்றது. மேலும் திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குநேரி தாலுகாவிலுள்ள செண்பகராமநல்லூர் கோயிலில் ஒரு கல் நாதஸ்வரம் ஒன்று உள்ளது. இந்த ஆலயத்தில் ஒரு சதுரமான கருங்கல்லில் வளைந்த குழாய் போன்று செதுக்கப்பட்டுள்ளது. வாய் சுமார் ஒரு அடி அளவுள்ளதாக அமைந்துள்ளது. ஆலய பிரம்மோற்சவத்தின் போதும் மற்றத் திருவிழாக்களிலும் இதில் நன்கு பயிற்சி செய்து அழுத்தமாகக் காற்றை ஊதும் அனுபவமுள்ள ஒருவர் இதில் ஊதி, "எக்காளத்தின்" நாதத்தையும், "சங்கின்" ஒலியையும் நன்றாக இசைத்துக் காட்டுகின்றார் (பக்கிரிசாமிபாரதி, கே.ஏ., 2004:191). பதினாறு பிரிவுகளைக் கொண்ட சோடச உபசாரத்தில் இசையும், இசைக்கருவிகளும் பதின்னான்காவது அம்சமாகவும், நடனம் பதினைந்தாவது அம்சமாகவும் வைத்து வலியுறுத்தப்பட்டுள்ளது (பக்கிரிசாமிபாரதி, கே.ஏ., 2004:172). தமிழ்நாட்டில் மழை குறைவடைந்து நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு நிலவருவாய் குறைவடைந்து வருமான இழப்புக் காரணமாகக் கோயில்கள் தோறும் ஒலித்துக் கொண்டிருந்த தேவாரமும், நாதஸ்வரமும் கலைஞர்களுக்குச் சம்பளம் கொடுக்க வழியற்றுப் போனமையால் இந்தக் கலைஞர்கள் வேறு தொழிலை நாடிச் சென்றதனால் புகழ்பெற்ற கோயில்களில் கூட இக்கலைஞர்கள் பணியாற்றுவது குறைவடைந்திருக்கிறது. இவர்களுடைய மாத ஊதியம் மிகக் குறைவு என்பதனால் பலர் இந்தப் பணிக்கு வருவதை விரும்புவதில்லை. இந்த இசை மரபு காப்பாற்றப்பட வேண்டுமானால் அர்ச்சகர்கள் போல ஓதுவார்கள், நாயனக்காரர்கள் நியமனமும் கோயில்கள் தோறும் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். ஒரு கிராமத்திற்கு ஒரு கோயிலிலாவது ஓதுவார்கள், நாயனக்காரர்கள் இருக்க வேண்டும். ஓதுவார்களும். நாயனக்காரர்களுமே மிகப் பெரிய சங்கீத சம்பிரதாயத்தை உருவாக்கியவர்கள். இவர்களை முழுநேரப் பணியாளர்களாக இல்லாமல் பகுதிநேர ஊழியர்களாக நியமித்து ஊதியம் வழங்கி இக்கலையை ஊக்குவிக்க வேண்டும்.

சிதம்பரம் திருக்கோயிலின் திருவிழாக்காலத்தில் நாதஸ்வரத்தில் வாசிக்க வேண்டிய இராகங்கள், இசைவகைகள் யாவும் ஆங்கே திட்டவட்டமாக விதிக்கப்பட்டிருக்கின்றன. முதல் திருநாளில், ஆரபி அல்லது தன்னியாசி, இரவு புறப்பாட்டின் போது சங்கராபரணம், இரண்டாம் நாளில், ரிதிகௌளை, மூன்றாம் திருநாளில் மாயாமாளவகௌளை, நான்காம் நாளுக்குச் சக்கரவாகம், ஐந்தாம் நாளன்று தெருவடைத்தான் எனப்படும் வாகனத்தைச் சுவாமி வந்தடையும் வரை நாதஸ்வரமும், பின்பு நட்டுமுட்டும் ஒலிக்கும். ஆறாம்நாள் சண்முகப்பியா அல்லது தோடி, ஏழாம் நாளில் காம்போதி அல்லது வராளி, தேர்த்திருநாளாகிய ஒன்பதாம் தினத்தன்று சுவாமி தேரில் எழுந்தருளும் போது தேர்மல்லாரி, ஆயிரம்கால் மண்டபத்தைச் சுவாமி அடைந்ததும் ஆகிரி, நீலாம்பரி இராகங்களிலுள்ள எச்சரிக்கைப் பாடல்கள், அவற்றைத் தொடர்ந்து ஏதேனுமொரு பதம், பதினொராம் திருநாளன்று உசேனிராகம் ஆகியவை இடம்பெற்றிருத்தல் வேண்டுமென்ற இசைமரபு தில்லைக்கோவிலில் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. (பக்கிரிசாமிபாரதி, கே.ஏ., 2004:43) இச்செய்திகளிலிருந்து ஆலயங்களில் தினந்தோறும் நடைபெறும் பூஜை வழிபாடுகளில் ஒவ்வொரு கோயில்களிலும் தனித்தனியான மரபு முறைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. முன்பு நாதஸ்வரத்திற்கு சுருதிக்காக ஒத்து வாசிக்கப்பட்டதைக் காணமுடிந்தது. இதற்காக ஒத்து வாசிப்பதற்கு இன்னொரு கலைஞரையும் அழைத்து வருவார்கள். பின்னர் சுருதிக்காக மரத்தாலான சுருதிப்பெட்டி போடுவதற்கு இன்னொரு கலைஞரையும் அழைத்து வருவார்கள். ஆனால் தற்காலத்தில் இலத்திரனியல் சுருதி மற்றும் இலத்திரனியல் தம்புரா என்பவற்றின் வருகையால் நாதஸ்வரக் கலைஞர்கள் தாங்களே மாட்டிக் கொண்டு நாதஸ்வரம் வாசிப்பதைக் காணமுடிகிறது. இத்துடன் ஆலயங்களில் நடைபெறும் ஒவ்வொரு பூஜை மற்றும் கிரியைகளிலும் அதற்கெனச் சிலராகங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. இப்போது நாதஸ்வரக் கலைஞர்களுக்குப் போதிய வருமானமின்மை, விளக்கமின்மையாலும் இக்கலைஞர்கள் குறைவடைந்த மையாலும் வேறு ராகங்களும் இசைக்கப்படுகின்றன. கோயிலின் வெளிவீதியின் வடக்குப் பிரகாரத்தில் சினிமாப் பாடல்கள் இசைக்கப்படுவதுடன் இதனை ரசிப்பதற்கென கூடுதலான மக்கள் ஒன்று கூடுவதையும் காணலாம்.

## குழல்

"குழலன் கோட்டன் குறும்பன் வியத்தன்" என்கிறது திருமுருகாற்றுப்படை

"துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
    தொடர்ந்திரு டியர்கணம் துதிப்ப
தத்திகை முழவம் முகிலென முழங்க
    நடம்புரி பரமர்தங் கோயில்" (திருமுறை:9.8.4)

"குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
    எங்கும் குழாம்பெருகி

விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி

மிகுவிரு வாரூரின்'' (திருமுறை:9.29.9)

போன்ற பாடல் வரிகள் குழல், வழிபாட்டுக் கருவியாக இருந்ததனைத் தெரிவிக்கின்றன. (கௌசல்யா, ராம., 2004:30) கோயில் வழிபாட்டில் வேணு (புல்லாங்குழல்) முத்திரை உள்ளது. ஆனால் இன்று திருக்கோயில் வழிபாட்டில் புல்லாங்குழல் இசைப்பது காணப்படவில்லை. இம்மரபு எப்படி மறைந்தது என்று தெரியவில்லை. தற்போது தேவார கோஷ்டிகளில் சில நேரங்களில் மட்டும் பக்க இசைக்கருவியாகப் புல்லாங்குழலைச் சேர்த்துக் கொள்கிறார்கள். (கௌசல்யா, ராம., 2004:44)

**சங்கு**

இயற்கையாகக் கிடைக்கும் துளைக்கருவிகளிலொன்றாகச் சங்கு விளங்குகிறது. திருமாலின் ஐந்து ஆயுதங்களாக (பஞ்சாயுதம்) சங்கு, கதை, வாள், வில் ஆகியவை விளங்குகின்றன. போர்க்களத்திலும், வழிபாட்டிலும், திருமணச் சடங்கிலும் சங்கு ஒலிக்கப்பட்டிருக்கிறது. கண்ணன் கையிலிருந்த சங்கிற்குப் பாஞ்சசன்னியம் என்று பெயர். சங்கு என்றதும் அது திருமாலின் கரத்தை அலங்கரிப்பதே நினைவிற்கு வரும். திருமால் கரத்திலுள்ள சங்கினை விளித்து ஆண்டாள் ஒரு பாசுரமே பாடி உள்ளார். சங்கரையா என்று விளித்து "உன்செல்வம் சால அழகியதே" என்று பாஞ்சசன்னியத்திற்குத் திருமால் கைத்தலத்தில் அமர்ந்திருக்கும் பாக்கியம் கிடைத்திருப்பதைப் பற்றிப் பேசுகிறாள். திருமாலுக்குப் பல்லாண்டு கூறும்பொழுது பாஞ்சசன்னியத்திற்கும் பல்லாண்டு கூறுகிறார் பெரியாழ்வார்.

"படைப்போர்புக்கு முழங்கும்

அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே" (கௌசல்யா, ராம., 2004:46)

திருக்கோயில்களில் கடவுளர் வீதி உலா புறப்படுவதை அறிவிக்கச் சங்கு ஊதப்படுவது மரபு. பூஜை நேரங்களிலும் ஊதுவர். வழிபாட்டில் சங்கு முத்திரை பிடிக்கப்படுவது உண்டு. திருவாரூர்க் கோயிலில் சங்கு வாத்தியம் உண்டு. பூசனைக்குரிய சங்குகளைப் பரிசுத்தமான இடத்தில் அதற்குரிய பெட்டகங்களில் வைத்துப் பேணுதல் வேண்டும். 12 பாகம் தங்கமும் 16 பாகம் வெள்ளியும் கலந்து செய்யப்பட்ட தகட்டின் மேலே கிலீம் என்றும், பக்கவாட்டில் இடதுபுறம் ஐம் என்றும் வலது புறம் ஸ்ரீம் என்றும் எழுதி அத்தகட்டைப் பெட்டியில் வைத்து அதன் மேல் சங்கை வைத்துப் பாதுகாக்க வேண்டும் என நூல்கள் கூறுகின்றன. (கௌசல்யா,ராம., 2004:47)

வைணவ ஆலயங்களில் சங்கில் சந்திரனை ஆவாகணம் செய்கிறார்கள். அதிலிருந்தே பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்கிறார்கள். ஆலயங்களில் கார்த்திகை மாதத்

திங்கட்கிழமைகளில் 108 சங்காபிடேகம், 1008 சங்காபிடேகம் ஆகியவை நிகழ்த்தப்படுகின்றன. திருக்கடையூர் போன்ற ஊர்களில் சங்காபிடேக வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்படுகிறது. தரையில் கோலமிட்டு, நெல் பரப்பி, அதன் மீது சங்குகளை வைப்பர். சங்கு வழிபாட்டிற்குப் பயன்படுவதோடு ஒரு வழிபாட்டுப் பொருளாகவும் உள்ளது. ஆனால் கோயில்களில் சங்கு ஒலிப்பது சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வருகிறது. (கௌசல்யா,ராம., 2004:48) கோயில்களில் குடமுழுக்கு முடிந்த மறுநாள் அவபிருதஸ்நானத்திற்காக "சூர்ணோத்சவம்" செய்வர். வேதிகை முன் நெல்லரிசி ஆகியவற்றைப் பரப்பி அஷ்டதளபத்மம் (எட்டுஇதழ் தாமரை) வரைந்து, அதன் மேல் உரல் உரக்கைகளை வைத்து இதை அலங்கரிப்பர். உரலில் மஞ்சள் பொடி அங்குரமுளை, பிரதானகுண்ட புஸ்பம் ஆகியவற்றைச் சிறிது வைத்து, இதற்கு முன் பேரி, சங்கு ஆகியவற்றை வைத்துப் பூசை செய்வர். பிறகு பேரி சங்கு ஒலிக்க ஓதுவார் பொற்சுண்ணப் பாடலைப் பாட உரலில் இட்ட திரவியங்களை இடித்து எடுத்துக் கொள்வர். இச்சடங்கில் சங்கு முக்கிய இடம் பெறுகிறது. (கௌசல்யா, ராம., 2004:48). திருவாரூர்க் கோயிலின் நாகசுர இசைக்குழுவில், காற்று வாத்தியமாகிய "சங்கினை"யும் உடன் வைத்துத் தாளகதியை இசைப்பர். தவிலுடன் தாள வாத்தியமாகச் சங்கிலும் தாளச்சொற் கட்டுகளையும், ஜதிகளையும் மிகவும் சிறப்பாக வாசித்து வந்துள்ளனர். இப்போது கோயில் பூஜை நேரங்களில் சங்கும் ஊதப்படுவது குறைவாகவே உள்ளது. பொதுமக்கள் வேலைப்பழு காரணமாகக் கோயில்களில் செலவிடும் நேரம் குறைவாக இருப்பதனால் இதனை இசைப்போரும் குறைவாகவே உள்ளது. (பக்கிரிசாமிபாரதி, கே.ஏ.,2004:43)

**முகவீணை**

நாதசுரத்தின் சிறிய வடிவமான முகவீணை சில வைணவத் தலங்களில் சில குறிப்பிட்ட சடங்குகளில் வாசிக்கப்படுகிறது. சிவத்தலங்களிலும் இதை வாசிப்பது உண்டு. இரவு அர்த்த ஜாமம் முடிந்து இறை மூர்த்தங்கள் பள்ளியறைக்கு எழுந்தருளும் போது முகவீணை வாசிக்கப்பட்டு வந்திருக்கிறது. இன்று இது பொதுப் பயன்பாட்டில் இல்லை. ஆழ்வார் திருநகரி கோவிலில் கல்லால் ஆன முகவீணை இருக்கிறது (கௌசல்யா, ராம.,2004:91)

**ஊது கருவிகள்**

காற்றினை உள்ளே செலுத்தி ஒலி எழுப்புகின்ற கொம்பு, திருச்சின்னம், எக்காளம், தாரை, பூரி, கௌரிகானம் ஆகிய கருவிகள் கடவுள் வீதி உலா புறப்படுவதை அறிவிக்க ஒலிக்கப்படுகின்றன. திருக்குட முழுக்கு, தேரோட்டம், பிரம்மோற்சவம், வீதி உலா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளிலும், திருமடங்களிலும் இம்மரியாதைச் சின்னங்களைக் காணலாம். ஞானசம்பந்தப் பெருமான் திருநெல்வாயில் அரத்துறைக்கு வந்த போது ஏறுதற்குச் சிவிகை, இடக்குடை, கூறி ஊதக் குலவு பொற்சின்னங்கள் இறைவனார் அருளினார். அவ்வூரார்

சம்பந்தப்பெருமானை, சங்கு, துந்துபி, தாரை, பேரி முதலான கருவிகளுடன் எதிர்கொள்கிறார்கள். முத்துச் சிவிகையில் ஏறித், தாளங்கள் ஒலிக்க ஞானசம்பந்தர் வருகிறார். காளம், திருச்சின்னம், தாரை ஆகியன ஒலிக்க அவர் எழுந்தருளுகிறார் என்ற செய்தியினைப் பெரியபுராணம் கூறுகிறது. (கௌசல்யா, ராம., 2004:51)

கோடியரால் இசைக்கப்படும் பித்தளையால் ஆன வளைந்த அமைப்பைக் கொண்ட கொம்பு இறைமூர்த்தங்கள் திருவீதியில் எழுந்தருளும் போது தேர் முன் ஊதப்படுகிறது. (கௌசல்யா, ராம, 2004:52) இருநீண்ட பித்தளைக் குழல்களை வாயில் ஒரே நேரத்தில் வைத்துக் கொண்டு ஊதி இரட்டையாகப் பயன்படுத்தப்படும் கருவியான திருச்சின்னமானது இறைவன் திருவீதி உலா புறப்படும் முன்பும், திருவீதி உலாவிலும் ஊதப்படுகிறது. தேர்த்தட்டில் திருச்சின்னம் ஊதுவோர் அமர்ந்திருப்பர். (கௌசல்யா, ராம., 2004:53) வாங்கா என்ற ஊது கருவியைத் தாங்கும் தாங்கியை வயிற்றுப் பகுதியில் தாங்கிப் பிடித்துக் கொண்டு ஊதப்படுகிறது. வெள்ளியிலான வெங்கா அல்லது வாங்கா மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பயன்படுத்தப்படுகின்றது. (கௌசல்யா, ராம.,2004:57) இவ்வாறு முன்னர் கோவில் வழிபாடுகளில் இசைக்கப்பட்டு வந்த இசைக்கருவிகளில் பல பெரும்பாலான கோவில்களில் வழக்கொழிந்து போயுள்மைமையைக் காணமுடிகிறது. இத்துடன் வேலைப்பழு காரணமாக பொதுமக்களும் ஆலயங்களில் செலவிடும் நேரமும் குறைவாக உள்ளமையும் ஒரு காரணமாகும்.

## ஏனைய சமயங்களின் வழிபாட்டில் இசைக்கருவிகள்

உலகில் பிறசமயத்தவர்களான கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் தங்களுக்கெனத் தனியான இசைமுறையை வகுத்துத் துதிப்பாடல்களையும் இசைக்கருவிகளுடன் இசைத்து வழிபடுகின்றனர். இஸ்லாமியரின் நாகூர் ஆண்டவரின் பள்ளிவாசலில் தினசரி பூஜைகள் நாதஸ்வர இசையோடு தான் நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றன. மொகரம் பண்டிகையில் அல்லா திருவீதியுலா புறப்படும் பொழுதும், சந்தனக்கூடு உற்சவங்களிலும் நாதஸ்வரக் கச்சேரி மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. (பக்கிரிசாமிபாரதி,கே.ஏ., 2004:70).

## எதிர்கால ஆய்வுக்கான பரிந்துரை

முன்னைய காலங்களில் ஆலயவழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட பல துளைக்கருவிகளிலும், ஊதுகருவிகளிலும் பல இன்று மறைந்து செல்ல, இன்று கிளாரினெட் போன்ற மேல்நாட்டுத் துளைக்கருவிகள் ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே மறைந்து கொண்டிருக்கின்ற

துளைக்கருவிகளை மீளுருவாக்கம் செய்யவும், புதிய இசைக்கருவிகளை அறிமுகப்படுத்தவும் இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட் வேண்டியது அவசியமானதொன்றாகும்.

## முடிவுரையும் கலந்துரையாடலும்

இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது ஆலயவழிபாட்டில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளில் ஏனைய கருவிகளை விடத் துளைக்கருவிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் சிறப்பாகக் காணப்படுகின்றது. இவ்வாத்தியத்தைக் கையாளும் வாத்தியக்கலைஞர்களுக்குக் கொடுக்கப்படும் கௌரவமும் சிறப்பாகக் காணப்படுகின்றது. ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் மற்றும் நித்திய, நைமித்திய பூஜைகளில் நாதஸ்வரமும், தவிலும் இசைக்கப்படுகின்றன. மிகப்பழமையான வழிபாட்டு முறையில் காணப்பட்ட நாதஸ்வரம், சங்கு ஆகிய கருவிகள் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முகவீணை, ஒத்து போன்ற கருவிகள் வழக்கிழந்து போயுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய ஜாவளி, காவடிச்சிந்து, போன்ற இசை வடிவங்களும், கிளாரினெட் ஆகிய துளைக்கருவியும் தற்போது ஆலயவழிபாட்டில் இடம்பெறுவதைக் காணலாம். ஒவ்வொரு நாளும் ஆலயங்களில் நடைபெறும் நித்திய பூஜை வழிபாடுகளில் துளைக்கருவியாகிய நாதஸ்வரமும், தவிலும் இன்று வரை ஒரு முக்கிய கருவியாக ஆலய வழிபாட்டில் இசைக்கப்படுகின்றன. முன்னைய காலங்களில் சங்கு, நாதஸ்வரம் போன்ற பல துளைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன், அன்றாடம் நடைபெறும் தினசரி பூஜைகளில் இசைப்பதற்கென்றும், திருவிழாக்காலங்களில் இசைப்பதற்கென்றும் தனித்தனியான இசைமரபுகள் உருவாக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. முகவீணை, ஒத்து, குழல், கொம்பு என்பன வழக்கிழந்து போயுள்ளன. ஆனால் தற்காலத்தில் திருக்கோயில் வழிபாட்டு முறைகளில் மாற்றம் ஏற்பட்டு ஆறுகாலப் பூஜைகளும் குறைவடைந்து நாகசுர இசைமுறையிலும் பல மாற்றங்கள் உருவாகி எந்தக்காலப் பூஜையிலும் எல்லாராகங்களும் வாசிக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இத்துடன் வடக்கு வீதியில் பழைய, புதிய சினிமாப்பாடல்கள் இசைக்கப்படுவதுடன், இதனைக் கேட்பதற்கென்றே அதிகளவான மக்கள் கூடுவதையும் காணலாம். தற்போது நாதஸ்வரத்தை இசைக்கும் கலைஞர்கள் குறைவடைந்து செல்வதனால் முக்கிய திருவிழாக்களில் மட்டும் இக்கருவி இசைக்கும் நிலை தோன்றியுள்ளது. இவ்வாறே சங்கு என்ற துளைக்கருவியும் ஆலயவழிபாடுகளிலும், திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலையில் வீதிகள் தோறும் பஜனை பாடிச் செல்லும் போதும் இசைக்கப்படுவது வழமையாக நடைபெற்று வந்தது. தற்போது இந்தநிலை மாறி ஆலயவழிபாடுகளில் கூடச் சங்கு ஒலிக்கப்படுவது குறைவாகவே காணப்படுகிறது. முன்பு ஆலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாக்களில் பாரததேசமாகிய இந்தியாவிலிருந்து புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர்கள் அழைக்கப்பட்டு இசைக்கச்சேரிகள் நடைபெறுவது வழமை. இப்போது பிரபலமான நாதஸ்வரக் கலைஞர்களின் நாதஸ்வரஇசை குறுந்தகடுகளில்

ஒலிப்பதிவு செய்து விற்பனை செய்யப்படுவதால் பூஜைவேளைகளில் இக்குறுந்தகடுகளை ஒலிக்கச் செய்து பூஜைகளும் நிகழ்த்தப்படுகின்றது. இத்துடன் நாதஸ்வரக் கலைஞர்களுக்குப் போதிய வருமானமின்மையால் அவர்கள் இத்தொழிலை விட்டு வேறு தொழில் தேடும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். முன்னைய காலங்களில் அரசர்கள் இக்கலைஞர்களுக்கு மாணியங்களை வழங்கியும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் அவர்களுக்கு ஆதரவளித்தும் வந்துள்ளனர். மேலும் இக்கலைஞர்களுக்கு அரசாங்க உதவிகளோ தனியார் உதவிகளோ இல்லாத நிலை காணப்படுகின்றது. ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறும் நேரங்களில் மட்டும் வருமானம் கிடைத்தாலும் மற்றைய நேரங்களில் நிரந்தர வருமானம் இல்லாதநிலை காணப்படுகின்றது. ஆகவே இக்கலை அருகிச் செல்வதுடன், அழிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே இந்த நிலையை மாற்றி அரசாங்கமோ, தனியார் நிறுவனங்களோ கலைஞர்களை ஊக்குவித்தும் ஆலயங்களில் மறைந்து சென்று கொண்டிருக்கின்ற இசைக்கருவிகளை மீளுருவாக்கம் செய்தும் இக்கலையை வளர்ப்பதற்கு உதவி புரியவேண்டும்.

## உசாத்துணை நூல்கள்

அங்கயற்கண்ணி, இ., மாதவி, இ.ரா., நவரத்தினம், நா.வி.மு., சீத்தாலட்சுமி, சீ., (2005), இசையும் பிறநுண்கலைகளும், இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அங்கயற்கண்ணி, இ, மாதவி, இரா., (2006), தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி – I, ஆகஸ்ட் முதற்பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அங்கயற்கண்ணி, இ., மாதவி, இரா., (2006), தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி – II, ஆகஸ்ட் முதற்பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கௌசல்யா, ராம., (2004), ஆலயவழிபாட்டில் இசைக்கருவிகள், மீனாம்பிகை பதிப்பகம், தஞ்சாவூர்.

கௌசல்யா, ராம., (2004), தமிழிசை ஓராய்வு, மீனாம்பிகை பதிப்பகம், தஞ்சாவூர்.

பார்த்தசாரதி, டி.எஸ்., (1994), இசைக்கருவிகள், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா.

சோமாஸ்கந்தசர்மா, அ.நா., (1998), மிருதங்கசங்கீதசாஸ்திரம், யுனி ஆர்ட்ஸ் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

பக்கிரிசாமிபாரதி, கே.ஏ., (2004), திருக்கோயில் நுண்கலைகள், குசேலர் பதிப்பகம், சென்னை.